This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது.  இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# மீண்டும் ஒரு குற்றம்

www.writersujatha.com

## 1

வஸந்த் கலர் டி.வி.யை திருகிக்கொண்டிருந்தான். திக்கென்று நீல சதுரத்தின் மேல் ஒரு சைனாக்காரி குட்டிக்கரணம் அடித்தாள். “இத பார்றா” என்றான். பெட்டியின் முன் குந்தி உட்கார்ந்துக்கொண்டு ஒரு கம்ப்பா கோலாவை உறிஞ்சிக்கொண்டே “கமான் சென்யாங் யாங்” என்று உற்சாகப்படுத்தினான்.

அருகில் செக்ஷன் 85 இண்டியன் பீனல் கோடில் ஆழ்ந்திருந்த கணேஷ் நிமிர்ந்து “எங்கடா புடிச்ச இந்தப் பொட்டியை?” என்றான்.

“அது வந்து பாஸ். ஏஷியாடுக்காக, ஓசி. நம்ம ஃப்ரண்டு காமினி கொடுத்தா.”

“அவளுக்கு டி.வி. தேவையில்லையா?”

“அவகிட்ட ரெண்டு இருக்கே. அதனால சும்மா பொம்மை பார்த்துட்டு தரேன்னு வாங்கிட்டு வந்தேன். இந்த சைனாக்காரிதான் எப்படி ரப்பர்ல வில்லாட்டம் வளையறா பார்த்தீங்களா? யாரையாவது காதலிக்கலாம்னா சப்பை மூக்கு; ஒண்ணும் அடையாளமே புரிய மாட்டேங்குது.”

இப்போது அந்த சீனள் ஓடிவந்து எம்பி மூன்று குட்டிக்காணம் அடித்து செங்குத்தாய் நின்று கையைத் தூக்கிச் சிரித்தாள். “பாஸ்! பாக்கற நமக்கு கையைத் சுளுக்கிக்கும் போல இருக்கு. எப்படித்தான் இந்த சைனாக்காரங்க மரப்பாச்சி மரப்பாச்சியா அற்புதங்களை சிருஷ்டிச்சு அனுப்பி வைக்கிறாங்களோ தெரியலை. பேஜிங்குக்கு பக்கத்தில் ஏதாவது ஃபாக்டரி வைச்சிருப்பாங்களோ என்னவோ!”

“இதபாத்தியா வசந்த்! செக்ஷன் 85 என்ன சொல்லுது? ஒருவன் குடித்திருக்கும்போது, தான் செய்யும் காரியத்தின் இயற்கையை அறியாத நிலையில் செய்த குற்றம் குற்றமல்ல.... நம்ம தொரை குடிச்சுட்டுத்தானே செய்தான் அந்தக் காரியத்தை? அந்தப் பெண்ணை...”

“பாஸ்! பூராப் படிங்க! ப்ரொவைடட்னு போட்டு அதுக்கு ஒரு வால் இருக்கும் பாருங்க. அதாவது அவனை மயக்கமுறச் செய்த பொருள் அவனை அறியாமல் அவனுக்கு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். துரை சொந்தமா குடிச்சுட்டு செய்தா எந்த ஜட்ஜும் ஒப்புக்க மாட்டாங்க. தொரை கேஸ் இப்ப வராது. தலையைத் தின்னாதிங்க. எல்லா ஜட்ஜும் ஏஷியாட் பார்த்துகிட்டு இருப்பாங்க. பேசாம வாங்க பொட்டிக்கு முன்னால. இண்டியாவில கலர் ட்ரான்ஸ்மிஷன் என்ன அருமையாப் பண்றாங்க பாருங்க. நாம ஒரு பொட்டி வாங்கலாமா?”

“ஏஷியாட் முடிஞ்சப்பறம் ஒடிஸ்ஸி நடனம்னு வயசான பாட்டிங்க ஆடிக்கிட்டு இருக்கிறதைப் பார்த்துக்கிட்டு இருக்கணும்!”

“நைன் பாயிண்ட் நைன்! பாஸ் என்ன ஃபண்டாஸ்டிக் எக்ஸர்ஸைஸ் பாருங்க.”